Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# Feminist Thoughts in *Araneri Saram*

**Dr. K. S. Kolappadhas**, Associate Professor of Tamil,
Pioneer Kumaraswamy College, Nagercoil-629003, Kanyakumari District, Tamil Nadu, India
ORCiD: https://orcid.org/0000-0003-1600-8034
DOI: 10.5281/zenodo.14744661

## Abstract

*"Araneri Saram" is a Tamil moral code. It was named after the virtues of virtue in the book. It was written by a Jain sage named Munapadiyar in the thirteenth century. It contains 226 verses. It contains various moral codes. It aims to reveal the views of Munapadiyar who has put forward about women at those times. In the twentieth century, women have all the rights. Today, women are excelling to the point that it is said that there is no sector where women do not exist. Women are the ones who bear all the responsibilities of the household in Tamil culture. A house will be flourished on the good deeds of the family members. Today, the world of innovation is the world of women. Nowadays, women are progressing in all sectors from the space sector to the military sector. On talking about the contribution of women in all sectors, whether they are young or old it is of no use. Women's equality and liberation must come completely. Women must get a good education and reach a higher level. "Araneri Saram" is a didactic work that consists of authentic resources of virtues. Hence, this article traces the thoughts of feminism in "Araneri Saram."*

**Keywords**: Araneri Saram, Discipline, Duties, House, Equality.

## References

[1] Thiruvalluvar. *Thirukkural*. Varthamanan Pathipakam, T. Nager Chennai-17, 2002.
[2] Prama, R. *Penniyam.* Tamil Puthakalayam, Masilamani Street, Chennai-17, 2001.
[3] Manikkam, A. (Urai). *Munipadiyar. Aranerisaram.* Araneethi Noolkal Varthamanan Pathipakam, T. Nager, Chennai-17, 2002.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# அற நெறிச்சாரத்தில் பெண்ணியச் சிந்தனைகள்

**முனைவர். கோ.சி. கோலப்பதாஸ்** , இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பயோனியர் குமாரசுவாமிக் கல்லூரி, நாகர்கோவில் - 629 003, கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-1600-8034
DOI: 10.5281/zenodo.14744661

## ஆய்வுசுருக்கம்

*அற நெறிச்சாரம் என்பது ஒரு தமிழ் நீதிநூல் ஆகும். அறத்தின் சிறப்பினை எடுத்துரைப்பதால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். பதி மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் முனைப்பாடியார் எனும் சமணமுனிவரால் இயற்றப்பட்டது. இதில் 226 வெண்பாக்கள் உள்ளன. இதில் பல்வேறு அறநெறிகள் கூறப்பட்டிருந்தாலும் பெண்கள் பற்றி முனைப்பாடியர் என்ன கருத்துக்களை முன்வைத்துள்ளார் என்பதனை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டில் பெண்களுக்கு எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டன. இன்று பெண்களே இல்லாததுறையே இல்லை என்று சொல்லும் அளவிற்கு பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். இல்லறத்தின் அனைத்து பொறுப்புகளை சுமப்பவள் பெண்ணே. புகழ் புரிந்தல் இல்லமா அல்லது பேய்புகுந்த இல்லமா என்பது அந்த இல்லறத்தாளை சார்ந்ததாகும். இன்று புதுமை உலகம் பெண்ணுலகம் இன்று எல்லாத்துறைகளிலும் பெண்கள் முன்னேறி வருகின்றனர் விண்வெளித்துறை, ராணுவத்துறை முதல் எல்லாத்துறைகளிலும் பெண்களின்பங்களிப்பு அழப்பெரியது பழமை பழமை என்று பேசிக்கொண்டு இருப்பதால் பயன் ஏதும் இல்லை பெண் சமத்துவமும் விடுதலையும் முழுமையாக வரவேண்டும் பெண்கள் நல்ல கல்வி கற்று மேல் நிலை அடைய வேண்டும்.*

**திறவுச்சொற்கள்:** அறநெறிச்சாரம், ஒழுக்கம், பொறுப்புகள், வீடு, சமத்துவம்.

## முன்னுரை

*அறநெறிச்சாரம்* என்பது ஒரு தமிழ் நீதிநூல் ஆகும். அறத்தின் சிறப்பினை எடுத்துரைப்பதால் இப்பெயர் ஏற்பட்டது என்பர். பதிமூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் முனைப்பாடியார் எனும் சமணமுனிவரால் இயற்றப்பட்டது. இதில் 226 வெண்பாக்கள் உள்ளன. இதில் பல்வேறு அறநெறிகள் கூறப்பட்டிருந்தாலும் பெண்கள் பற்றி முனைப்பாடியர் என்ன கருத்துக்களை முன்வைத்துள்ளார் என்பதனை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

'அச்சமும் மடமும் நாணும் நிச்சயம் பெண்பாற் கூரிய' என்று தொல்காப்பியர் கூறுகிறார். 'பெண்ணாகிவந்த தொருமாயபிசாசு' என்கிறார் பட்டினத்தார். 'தையல் சொல்கேளேல்' என்று அறிவுறுத்துகிறார் பெண்பாற்புலவர் ஔவையார். 'பெண்புத்தி

பின்புத்தி பெண்ணறிவு என்பது பெரும் பேதமைத்தே' என்பது பழமொழி. 'பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாதிருத்தல்' என்கிறது வெற்றிவேற்கை. 'குலமகட்கு அழகு தன் கொழுநனைப்பேணுதல்' இது போன்ற சொற்களே பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஒரு பெண் திருமணத்திற்கு முன் தந்தையையும் இதிருமணத்திற்கு பின் கணவனையும், முதுமையில் பிள்ளைகளையும் சார்ந்திருக்க வேண்டும் என்ற நிலையே காணப்படுகிறது. அறநெறிசாரம் என்னும் நூலும் இதேகொள்கையை பின் பற்றுகிறதா என்பதனையே இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

**பெண்ணியம்**

'Feminism' என்ற ஆங்கிலச்சொல், Femina' என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவிவந்ததாகும். 'Femina' என்ற சொல்லுக்குப் 'பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள' என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்பே, பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது. 1889 வரை 'Womanism' என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினையையும் அதனடிப்படையிலாலான போராட்டத்தையும், உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது. (முனைவர் இரா. பிரேமா. ப. 11)

1848-இல் அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள செனகாபால்ஸ் (Seneca Falls) என்ற இடத்தில் நடந்த மாநாடு உலகப் பெண்ணிய வரலாற்றில் ஒருமைல் கல்லாகும். லுக்கரிரிடியா மாட் (Lucretia Mott) எலிஸபெத் கேடிஸ்டான்டன் (Elizabeth cady stanton) என்ற இரு பெண்மணிகள் இம்மாநாட்டை நடத்தினர். அப்பொழுது அவ்விருவரும் பெண்களுக்கான இயக்கம் ஒன்றை முறையாகத் தொடங்கினர். இம்மாநாட்டில் பெண்களுக்குக் கீழ்கண்ட சில இன்றியமையா சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

**1. திருமணமானபெண்களுக்குச்சொத்தில்உரிமை.**

**2. கல்வியில்பெண்களுக்குஅதிகவாய்ப்பளித்தல்.**

**3. தொழில், வணிகத்துறை மற்றும் வழிபடும் இடங்களில் (Church) பெண்களுக்கு வாய்ப்பளித்தல் போன்ற தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.**

இதன் பின் பெண்களுக்கு சில உரிமைகள் வழங்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் பெண்களுக்கு எல்லா உரிமைகளும் கொடுக்கப்பட்டன. இன்று பெண்களே இல்லாததுறையே இல்லை என்று சொல்லும் அளவிற்கு பெண்கள் சிறந்து விளங்குகின்றனர். பெண்ணியம், (முனைவர் இரா. பிரேமா, ப,18)

**இல்லறமும்மனைவியும்சிறத்தல்**

ஒர் இல்லறம் சிறக்க வேண்டின் மனைவி சிறப்புடன் செயல்பட வேண்டும். இல்லறம் என்பது ஆண், பெண் என்ற இரண்டு உருளையால் நடக்கும் இன்ப வாழ்க்கை என்பார்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


பாரதிதாசன். இல்லறத்தின் அனைத்துப் பொறுப்புகளை சுமப்பவள் பெண்ணே. புகழ் புரிந்த இல்லமா அல்லது பேய்புகுந்த இல்லமா என்பது அந்த இல்லறத் தாளை சார்ந்ததாகும்.

**வினைகாத்து வந்த விருந்தோம்பி நின்றான்**
**மனை வாழ்க்கை நன்றுதவத்தின் - புனைகோதை**
**மெல்லியல் நல்லாளும் நல்லள் விருந்தோம்பிச்**
**சொல்லெதிர் சொல்லாளெனில். (அறநெறிசாரம். 158)**

தீய செயலைச் செய்யாது விலக்கி, தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து, இனிவர இருக்கும் விருந்தினரை எதிர்பார்த் திருப்பவனது இல்வாழ்வு தவத்தை விடச்சிறந்தது. அழகிய கூந்தலையும் மென்மையான சாயலையும் உடைய மங்கையும் தன் கணவன் சொல்லுக்கு எதிர் சொல்லாதவள் ஆயின் சிறந்தவளே ஆவாள் என்கிறது அறநெறிசாரம்.

**மனைவிக்குரிய நற்குணங்கள்**

வள்ளுவர் வாழ்க்கை துணை நலம் என ஓர் அதிகாரமே வகுத்து மனைவியின் சிறப்புக்களை மாண் புற எடுத்துரைத்துள்ளார். மனைத்தக்க மாண்புடையாள் என்றும் வளத்தக்காள் சோர்விலாள் பெண் என்றும் பெருமைபடுத்துகிறார் பாரதிதாசன். குடும்ப விளக்கில் பெண்ணின் பெருமை பேசுகிறார்,

**கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை**
**கண்டது கண்டு விழையாமை – விண்டு**
**வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி**
**உறுப்போடு ணர்வுடையாள் பெண். (அறநெறிசாரம் 159)**

தன் கணவனின் மனக்குறிப்பு அறிந்து நடத்தல், மகளிர்க்குரிய நாண் உடைமை, கண்ட பொருளையெல்லாம் விரும்பாமை, தன் கணவனுடன் மாறுபட்டு எதிர்பேசாமை என்ற இவற்றுடன் அழகும் அறிவும் உடையவள் பெண் ஆவாள் என்கிறார் முனைப்பாடியார். இன்று இப்படிப்பட்ட ஒரு பெண் இருப்பாளா என்பது சந்தேகமே 13ஆம் நூற்றாண்டில் இருந்திருக்கலாம்.

**பெண்டிர் எனச்சிறப்பாகப் பேசப்படுபவர்**

மகளிர் எல்லாம் கல்வியறிவு ஒழுக்கம் உளராயின் மருத்துவமே வேண்டாம் பிணி மூப்புவாரா மகளிரெல்லாம் அரசியலை கைப்பற்றிய ஆண்டால் மாநிலத்தில் போர் இல்லை சாக்காடும் இல்லை தொல்லையில்லா அவ்வுலகம் நான்வாழும் இல்லம் பகை இல்லை அங்கு இன்மை இல்லை பிணியில்லை பழி இல்லை என்துணைவி அரசு ஆண்டதாலே என்கிறார் பாரதிதாசன். கல்வி அறிவும் ஒழுக்கமும் பெற்றமகளிரின் பெருமையை இது பறைசாற்றுவதோடு அறிவுமனை. ஆனால் அமைதி உலகு உண்டாகும் என்று உலக அமைதிக்கும் நல் மனைவியின் துணை தேவை என்பதனை வலியுறுத்துகிறார். இதனை இப்பாடலில் காண்கிறோம்.

**மடப்பதூ உம்மக்கட் பெறுவதூஉம் பெண்பால்**
**முடிப்பதூம் எல்லாருஞ் செய்வர் - படைத்ததனால்**
**இட்டுண்டில் வாழ்க்கை புரிந்துதாம் நல்லறத்தே**
**நிற்பாரே பெண்டிரென்பார். (அறநெறிசாரம்.160)**

மங்கைப் பருவத்தை அடைதலும், பிள்ளைகளைப் பெறுதலும், பெண்களுக்குரிய அணிகளை அணிந்து கொள்ளுதல் என்ற இவற்றை எல்லாரும் செய்வர். பெற்ற பொருள் சிறிதே ஆயினும் அதனை இரப்பவர்க்கு அளித்துத் தாமும் உண்டு, மனைக்குரிய மற்றக் கடன்களையும் விரும்பிச் செய்து, கற்பு நெறியினின்று வழுவாது விளங்குபவர்களே பெண்டிர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர் ஆவார்.

**கணவனால் போற்றப்படும் மனைவி**

பெண்கள் எந்நேரமும் ஏதாவது ஒருவேலையை செய்தவாறு சுறுசுறுப்பாக இயங்க வேண்டும். கணவன் சொல்வது போல் கேட்டு நடத்த வேண்டும் என்று இப்பாடல் உரைக்கிறது. இன்று இக்காலத்தில் இது போல் நடக்குமா என்பது கேள்விக்குறியே. இன்று சிறிய சிறிய பிரச்சனைகளுக்கு விவாகரத்துவரை செல்லும் நிலைமை தான் காணப்படுகிறது. ஆண் பெண் சமத்துவம் பேசும் இக்காலகட்டத்தில் நாம் வாழ்ந்துவருகிறோம்.

**வழிபா டுடையாளாய் வாழ்க்கை நடாஅய்**
**முனியாது சொல்லிற்றுச் செய்தாங் - கெதிருரையாது**
**ஏத்திப் பணியுமேல் இல்லாளை ஆண்மகன்**
**போற்றிப் புனையும் புரிந்து (அறநெறிசாரம்.161)**

கணவனின் கொள்கையைப் பின்பற்றி வாழ்வை நடத்தி, அவன் உரைத்ததை வெறுப்பில்லாது செய்து, சினந்து அவன் பேசினாலும் எதிராகப் பேசாது புகழ்ந்து வணங்குவாளாயின், அத்தைகைய மனைவியைக் கணவன் விரும்பிப் போற்றுவான். இப்படி ஒரு மனைவி இந்த இருபத்தியொராம் நூற்றாண்டில் கிடைத்தால் அவன் பெரும்பாக்கியசாலி தான்.

**கற்பழிதற்குரிய வழிகள்**

கற்பு என்பது மகளிரது சீரிய ஒழுக்கத்தை குறிப்பதாகும். கற்பனப்படுவது சொல் திறம்பாமை என்பது அவ்வையார்வாக்கு. இல்வாழ்க்கைக்குரிய நெறிகளை கற்பித்துக் கொண்டு அவற்றிற்கு ஏற்பவாழதொடங்கும் வாழ்வே கற்பு எனப்படும். இந்திய சமூகத்தில் கற்பழிந்துவிட்டால் அவரை ஒரு பெண்ணாக வேபார்ப்பதில்லை. அதனால் தான் கணவன் இறந்த பின் துறவு வாழ்க்கையாகவே அவர்களுடைய வாழ்வு அமைந்து விடுகிறது. இப்பாடலில் பெண்கள் கற்பு அழிவதற்கான காரணங்களை பாடலில் பட்டியலிடுகிறார்.

***தலைமகனில் தீர்ந்துறைதல் தான்பிறரில் சேர்தல்***
***நிலைமையில் தீப்பெண்டிர்ச் சேர்தல் - கலனணிந்து***
***வேற்றூர்ப் புகுதல் விழாக்காண்டல் நோன்பிடுதல்***

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**கோற்றொடியாள் கோளழியுமாறு. (அறநெறிசாரம்.162)**

கணவனைப் பிரிந்து வாழ்தல், தானே பிறர் வீட்டுக்கு அடிக்கடி செல்லுதல், நல்லொழுக்கமற்ற தீய மகளிருடன் கூடிப்பழகுதல், தனியே வேற்றூர் செல்லுதல், கணவனின் இசைவின்றி நோன்பை மேற்கொள்ளுதல் என்ற இவை மகளிரின் கற்பு அழிவதற்குரிய வழிகளாகும்.

**கணவனுக்கு இயமனாகும் பெண்டிர்**

இப்பாடலில் கணவன் ஊரில் இல்லாத நேரத்தில் தங்களை அழகுபடுத்தக் கூடாது என்று குறிப்பிடுகிறார். இதேகாலத்துக்கு ஒவ்வாத ஒன்றாகும் கணவன் ஒருவரிலும் மனைவியை இன்னொரு ஊரிலும் வேலைபார்க்கும் போது தன்னை அலங்காரம் செய்யாமல் எப்படி வேலைக்கு செல்லமுடியும். வேலைக்கு செல்வதால் எல்லாம் கற்பழிந்துவிடும் என்பதனை ஏற்கமுடியாது இன்றைய கணவனுக்கு வேலைக்கு சென்று கைகொடுப்பவளே பெண்தான். பொருளாதாரரீதியாக ஒரு குடும்பம் உயர் நிலை அடைய வேண்டும் என்று சொன்னால் கணவனும் மனைவியும் வேலைக்கு சென்று தான் ஆக வேண்டும் அப்படி குடும்பத்தைக்காக்கும் ஒரு பெண் எப்படி எமன் ஆகமுடியும்.

**அயலூரெவன் போக அம் மஞ்சளாடிக்**
**கயலோர் கண்ஆர எழுதிப் - புயலைம்பால்**
**வண்டோச்சிப் நின்றுலாம் வாளோர் தடங்கண்ணாள்**
**தண்டோச்சிப்பின் செல்லுங்கூற்று. (அறநெறிசாரம்.163)**

கணவன் வேற்றூர் சென்ற சமயத்தைப்பார்த்து, மஞ்சள் பூசிக் குளித்து கயல் மீன் போன்ற கண்களுக்கு அழகுண்டாகமையெழுதி, மேகம் போன்ற கூந்தலில் அணிந்த மலர்களை மொய்க்கும் வண்டுகளை ஓட்டி, வெளியில் நின்று உலவும் வாள் போன்ற நீண்ட கண்ணை உடையவள், தண்டாயுதத்தை வீசித்தன் (கணவன்) பின்னால் சென்று தாக்கும் இயமனைப் போன்றவள் ஆவாள் என்கிறது அறநெறிச்சாரம். ஆனால் இக்கருத்தை எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

**மனைவியும் கணவனும் சேர்ந்து நடத்துவதே இல்வாழ்வு**

மனைவியும் கணவனும் சேர்ந்து நடத்துவதே இல்வாழ்வு அவ்வாறு இருந்தால் தான் ஒரு குடும்பம் சிறப்பாக அமையும். இருவரில் எவர் ஒருவர் குடும்பத்தில் சுணக்கம் காட்டினால் குடும்பம் என்ற அச்சாணி உடைந்து விடும். மனம், மெய், மொழிகளால் ஒத்து போதலே சிறந்த இல்வாழ்வு ஆகும்.

**தற்காத்துத்தற் கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண் (குறள்.56)**

மேலும்,

**மருவிய காதல் மனையாளும் தானும்**
**இருவரும் பூண்டுய்ப் பின் அல்லால் - ஒருவரால்**

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

**இல்வாழ்க் கையென்றும் இயல்புடையவான் சகடம்**
**செல்லாது தெற்றிற்று நின்று. (அறநெறிசாரம்.164)**

இல்வாழ்க்கை என்ற வண்டி ஒத்த அன்புடைய மனைவியும் கணவனும் ஆகிய இருவரும் செலுத்தினால் ஓடும். அங்ஙனமின்றி, அந்த இருவருள் ஒருவரால் இல்வாழ்க்கையான அழகிய உயர்ந்த வண்டி செலுத்தப்பட்டால், அது செல்லாமல் தடைப்பட்டு நின்றுவிடும். ஒற்றைசக்கரத்தால் வண்டி ஓடாது என்பதனை எடுத்துரைக்கிறார். ஆனால் இன்று விவாகரத்து அதிகமாகிவருகிறது. என்பது கண்கூடாகபார்க்கிறோம். குடும்பம் என்ற அமைப்பு உடையுமானால் அது இச்சமூகத்திற்கு நல்லதன்று. இன்றைய காலகட்டத்தில் முதியோர் இல்லங்கள் அதிகரித்து வருவதைகாண்கிறோம். இது ஒரு சமூகசீர்கேடு ஆகும்.

**அயலான் மனைவியை விரும்பாதே**

பிறர் மனைவிரும்பாதே என்பது அறம் ஆகும். இது ஒரு இழிசெயல் ஆகும். பிறர் மனை விரும்பியதால் இராவணன் மாண்ட கதை அனைவரும் அறிவர் பிறர் மனைவிரும்பினால் எல்லா புகழும் அழிந்துவிடும்.

**அறனும் அறனறிந்த செய்கையும் சான்றோர்**
**திறனுடைய னென்றுரைக்கும் தேசும் - பிறனில்**
**பிழைத்தானெனப் பிறரால் பேசப்படு மேல்**
**இழுக்காம் ஒருங்கேயிவை. (அறநெறிசாரம்.89)**

'இவன் அயலான் மனிவயை விரும்பினான்' என மற்றவரால் பேசப்படுவானாயின், அவன் மேற் கொண்ட அறமும், அந்த அறத்துக் கேற்ற செயலும், பெரியோர் பலரும் இவன் நல்ல நெறியுஐடயவன் என்று சொல்லும் புகழும் ஆகியயாவும் ஒரு சேரப்பழியாய் அமையும்.

**பெண்ணிடம் மயங்கும் உலகு**

பெண்களுடன் பேசிபழகுவதால் துன்பமே ஏற்படும். எறும்பு ஊரகல்லும் தேயும் என்பர் அது போல பெண்களுடன் பழகிவருவதால் மனவுறதி தளர்ந்து நெகிழ்வு தன்மை ஏற்பட்டுதன் நிலையை அழியநேரிடும் ஆகவே பெண்களுடன் பழகும் போது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இன்று ஆண் பெண் நட்பு என்று பேசினாலுமே அதிலும் எச்சரிக்கை உணர்வு இருவருக்கும் தேவை.

**சேட்டவாய் ககேட்பவர் விரைந்தோடி ஞாலத்தார்**
**கேட்டைக் கிழத்தியைப் பாடுங்கால் - கோட்டில்லா**
**ஓதுமின்ஓதி அடங்கு மின்என்னுஞ் சொல்**
**கூதற்குக்கூதிர்அனைத்து. (அறநெறிசாரம்.111)**

மூதேவியைப் போன்ற ஒருத்தியைப் பற்றிப் பாடும் போது உலகத்தார் விரைந்து போய் அதை ஆசையுடன் கேட்பர். அதற்கு மாறாக 'மாறுபாடு இல்லாத நூல்களைக் கற்பீர் அதற்கு ஏற்ப

ஒழுகுங்கள்' என்னும் சொல்லைப் பெரியோர் கூறினால் அச்சொல், ஏற்கெனவே குளிரால் நடுங்கிய உடலில் மேலும் குளிர் காற்று வீசியதைப் போல் வெறுக்கப்படும்.

**முடிவுரை**

அறநெறிசாரம் எனும் நூல் எழுதப்பட்ட காலம் 13ம் நூற்றாண்டு ஆகும். அக்காலத்திற்கு ஏற்ப எழுதப்பட்ட அறக்கருத்துக்களையே அந்நூல் முன்வைக்கிறது. ஆனால் இன்று புதுமை உலகம் பெண்ணுலகம் இன்று எல்லாத் துறைகளிலும் பெண்கள் முன்னேறி வருகின்றனர். விண்வெளித்துறைஇ ராணுவத்துறை முதல் எல்லாத்துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு அழப்பெரியது பழமை பழமைஎன்று பேசிக்கொண்டு இருப்பதால் பயன் ஏதும் இல்லை பெண் சமத்துவமும் விடுதலையும் முழுமையாகவர வேண்டும். பெண்கள் நல்ல கல்வி கற்று மேல்நிலை அடைய வேண்டும் பாரதிதாசன் சொல்வான். கல்வி கற்று விழிப்புற்று தூய்மை இகழ்ந்து போர்த் தொழில் பழகிவையத்தின் தலைமை ஏற்க வேண்டும். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு இதற்கு எந்த காலம் வெளியேறி போய்விட்டது. மேலும் பாரதிதாசன் பெண்களுக்கு கல்வி வேண்டும் குடித்தனம் பேணுவதற்கு பெண்களுக்கு கல்வி வேண்டும் மக்களை பேணுவதற்கு பெண்களுக்கு பின் கற்ககல்வி வேண்டும் உலகினை பேணுவதற்கே பெண்களுக்கு கல்வி வேண்டும் கல்வியை பேணுவதற்கு ஆண்களோடு பெண்களும் சரி நிகர்சமானமாக வாழ்வோம் இந்நாட்டிலே என்று ஆணும் பெண்ணும் நிகர் என கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையம் தலைக்குமால் என்ற பாடினான் பாரதி. ஆணும் பெண்ணும் சரிநிகர்சமானம் என்பதனை நாமும் வலியுறுத்துவோம்.

**குறிப்புகள்**

[1] திருவள்ளுவர். *திருக்குறள்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை -17, 2002.

[2] பிரேமா, இரா. *பெண்ணியம். தமிழ் புத்தகாலயம்,* சென்னை 17. 2001.

[3] மாணிக்கம், அ, (உ.ஆ). *முனைப்பாடியார், அறநெறிச்சாரம்.* அறநீதி நொற்கள் வர்த்தமானன் பதிப்பகம், தி. நகர். சென்னை -17, 2023.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.